# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>சாதரணக் கூட்டப்பொருள்</u>

2010ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் தேதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை—I பிரிவு எண் 3 (1)—ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## <u>பொருள்கள்</u>

<table>
<tr><th>மாமன்ற கூட்ட தேதி</th><th colspan="2">வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள்</th><th>மாமன்ற தீர்மானம்</th></tr>
<tr><td>26.05.10</td><td>1</td><td>

1. இம்மாநகராட்சிக்கு இயக்குதல் மற்றும் மேம்பாடு ஈடு செய்யும் நிதி (Operation and Maintenance Gap filling fund) லிருந்து கீழ்க்கண்ட குடிநீர் பணிகள் செய்ய ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் ரூபாய் 25 இலட்சம் மான்யமாக வழங்க அனுமதித்தது சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண் 39618/2009/எல் ஏ3 நாள் 29.1.2010ல் அனுமதி வழங்கப்பட்டது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>கிருஷ்ணராஜபுரம் 1வது மற்றும் 9வது தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி</td><td>9.50</td></tr>
<tr><td>2</td><td>சுந்தரராமபுரம் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி</td><td>3.75</td></tr>
<tr><td>3</td><td>கே.வி.கே. நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி</td><td>7.00</td></tr>
<tr><td>4</td><td>வண்ணார் 1 , 2 மற்றும் 3வது தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி</td><td>6.80</td></tr>
<tr><td>5</td><td>திரேஸ்புரம் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் பணிக்கும் பணி</td><td>5.40</td></tr>
<tr><td>6</td><td>பீச்ரோடு சின்னக்கடை தெரு வரை குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி</td><td>8.50</td></tr>
<tr><td>7</td><td>என்.ஜி.ஓ. காலனிப் பகுதியில் மெயின் சாலையில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி</td><td>0.90</td></tr>
<tr><td>8</td><td>சுந்தரவேல்புரம் 1 முதல் 8வது தெரு வரை உள்ள பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி</td><td>8.80</td></tr>
</table>

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிகளுக்கு ரூபாய் 40 இலட்சத்திற்கு மன்றம் தனது தீர்மான எண் 44 நாள் 26—02—2010ல் அனுமதிக்கப்பட்டது. தற்போது மேற்கண்ட திட்டத்தில் மேலே குறிப்பிட்டுளள பணிகள் செய்வதற்கும் கூடுதல் செலவினம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** — அனுமதிக்கலாம் இ1/14394/2009

</td><td>109) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 2 | இம்மாநகராட்சிக்கு சொந்தமான GLR பம்பிங் ஸ்டேசனில் தொடர்ச்சியாக தினமும் மின்தடை ஆவதால் குடிநீர் விநியோகம் செய்யும் பணி பாதிப்படைகிறது. பொதுமக்களின் புகார்களும் வந்தவண்ணம் உள்ளது.<br><br>எனவே மேற்கண்ட இடத்தில் புதியதாக 82.5 கே.வி.ஏ. ஜெனரேட்டர் புதியதாக நிறுவவும் அதை வைப்பதற்கு உரிய அறை கட்டுவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 13.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>** – மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட தொகையினை குடிநீர் விநியோக டேவணித்தொகையிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.<br><br>இ3/8043/10 | 110) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 3 | தூத்துக்குடி மாநகராட்சியில் பெண்கள் சிசுக்கள் மருத்துவமனையில் அலவலக உதவியாளராக பணிபுரிந்து 3–9–2009ல் சுயவிருப்ப ஓய்வு பெற்றுள்ள திரு. முருகாண்டி அவர்களுக்கு சிறப்பு சேமநலநிதி 01.03.1986 முதல் 30–6–1998 வரை (12 வருடம் 4 மாதம்) அதாவது 148 மாதம் ரூ 20/– வீதம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை ரூ 13468/–ம் அரசு மான்யத்தொகை ரூ 10000/– ம் சேர்த்து மொத்த ரூ 23468/–ஐ அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>குறிப்பு</u>**– மாமன்றம் அனுமதி அளிக்கலாம் சி4/7400/10 | 111) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது |
| | 4 | நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் நே.மு.க.எண். 64531/2008/ஆர் 1 நாள் 10.02.2010 கடிதத்தில் சிறு தொழில் நடைபெறும் மனையிடங்களுக்கு சொத்து வரி விதிப்பில் குடியிருப்புகளுக்கு இணையாக சலுகை வழங்குவது தொடர்பாக மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்படும் சிறு தொழில்களை வகைபாடு செய்து, அது நியாயமானதாக இருக்கும் நிலையில் மேற்படி தொழில் சொந்த கட்டிடத்தில் செயல்படும்பட்சத்தில் அதற்கு குடியிருப்புகளுக்கு இணையாக சொத்து வரி விதிக்க மாமன்றம் ஏற்றுக்கொள்ளலாமா அல்லது நிராகரிக்கலாமா என்பது குறித்து மாமன்றம் முடிவு செய்து அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் கடிதம் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>** – இப்பொருள் குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.<br><br>ந.க.எண். 04506/2010/அ1 | 112) மாநகராட்சியின் வருவாயை பெருக்கும் விதத்தில் சொந்த கட்டிடத்தில் செயல்பட்டு வரும் சிறுதொழில்–களையும் வணிக பயன்பாடு விகிதத்திலேயே சொத்துவரி நிர்ணயம் செய்யலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 5 | இம்மாநகராட்சி ரோச் பூங்காவில் தற்சமயம் கட்டிடம் கட்டி அக்கட்டிடம் உபயோகம் இல்லாமல் உள்ளது. மேற்கண்ட கட்டிடம் தூத்துக்குடி ரோச் பூங்கா அழகுபடுத்தும் கமிட்டி மூலமமாக இலவசமாக கட்டப்பட்டுள்ளது.<br><br>தற்சமயம் ரோச் பார்க் வாக்கர்ஸ் கிளப் தூத்துக்குடி மூலமாக உடற்பயிற்சி கருவிகள் வைப்பதற்கு உபயோகித்து கொள்வதற்காக அனுமதி கேட்டு மேற்படி ரோச் பார்க் வாக்கர்ஸ் கிளப்பிடமிருந்து 1–4–2010ம் தேதியில் இவ்வலுவலகத்திற்கு கடிதம் வரப்பெற்றுள்ளது.<br><br>எனவே மேற்படி ரோச் பார்க் வாக்கர்ஸ் கிளப்புக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் கட்டிடத்தை பயன்படுத்திக்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>1) மேற்கண்ட கட்டிடத்திற்கு ஆகும் மின்சார செலவினை மனுதாரர் சொந்த செலவில் செலுத்திக் கொள்ள வேண்டும்.<br><br>2) Type Design ஐ மாற்றக்கூடாது.<br><br>3) மேற்கண்ட உடற்பயிற்சி கூடத்திற்கு வரும் நபர்களிடம் எவ்விதக் கட்டணமும் வசூல் செய்யக்கூடாது.<br><br>4) மேற்கண்ட கட்டிடத்தில் மாறுதல் ஏதேனும் தேவைப்பட்டால் ஆணையாளர் மற்றும் மாமன்ற அனுமதி பெற்றே பணிகள் செய்ய வேண்டும்.<br><br>மேற்படி நிபந்தனைகளின் பேரில் ரோச் பூங்கா கட்டிடத்தைப் பயன்படுத்திக்கொள்ள ரோச் பூங்கா வாக்கர்ஸ் கிளப்புக்கு அனுமதி வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு –</u>**<br><br>1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2) நிபந்தனைகளின் அடிப்படையில் ரோச் பூங்கா கட்டிடத்தைப் பயன்படுத்திக்கொள்ள ரோச் பூங்கா வாக்கர்ஸ் கிளப்புக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>3) தற்காலிகமாக 1 வருட காலத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br><br>இ5/5635/10 | 113) அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதி வழங்கப்பட்டது |
| | 6 | இம்மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடைதிட்டப் பணிகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்கம் செய்ய இயக்குதல் மற்றும் கையாளுதல் திட்ட நிதியின் கீழ் வாங்க அனுமதிக்கப்பட்ட ஜெட் ராடு மெஷின் மற்றும் கைடிராலிக் ஏணி வாங்க ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு மெஸ்ஸர்ஸ் எந்திரால் கமியூனிகேஷன் பி.லிட் சென்னை நிறுவனத்தினர் ரூ. 25369/–(ரூபாய் இருபத்தைந்தாயிரத்து முந்நூற்றி அறுபத் ஒன்பது மட்டும்)க்கு பட்டியல் வழங்கி உள்ளார்கள். தொகையை வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> – அனுமதிக்கலாம்**<br><br>14394/2009/இ1 | 114) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 7 | இம்மாநகராட்சி பகுதியில் உள்ள பக்கிள் ஓடையில் இரண்டாம் கட்டமாக 2.402 கி.மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் தளம் மற்றும் சிறு கால்வாய் கட்டும் பணிகளுக்கு ஒப்பந்ததாரர் தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு மெஸ்ஸர்ஸ் எந்திரால் கமியூனிகேஷன் பி.லிட். சென்னை நிறுவனத்தினர் ரூ 117455/– (ரூபாய் ஒரு லட்சத்தி பதினேழாயிரத்தி நாநூற்றி ஐம்பத்தைந்து மட்டும்) க்கு பட்டியல் வழங்கி உள்ளார்கள். தொகையை வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> – அனுமதிக்கலாம்**<br>23660/2007/இ1 | 115) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 8 | இம்மாநகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்கா நீரேற்றும் நிலையத்தில் அமைந்துள்ள 250 கேவிஏ ஜெனரேட்டர் தற்போது நிலவும் மின்தடையால் தொடர்ச்சியாக இயக்கப்பட்டு வருகிறது. தற்போது மின்தடை தொடர்ச்சியாக ஏற்பட்டு கொண்டிருப்பதால் ஏதேனும் பழுது ஏற்படாமல் பார்ப்பது அத்தியாவசியமாக ஒன்றாக உள்ளது. அப்படி ஏதேனும் பழுது ஏற்பட்டாலும் உடனடியாக பழுது சரி செய்து ஒட்டப்படவும் வேண்டும். அதற்கு நம்முடைய ஜெனரேட்டர் கிர்லோஸ்கர் என்ஜின் ஆக இருப்பதால் கிர்லோஸ்கர் Authorised Dealer ஆன (திருநெல்வேலி, தூத்துக்குடி, குமரி மூன்று மாவட்டங்களுக்கு ) ஸ்ரீசாய் டீசல் திருநெல்வேலி நிறுவனத்தாருக்கு Annual Maintenance செய்ய மாமன்ற அனுமதி கோரப்படுகிறது மேலும் இதற்காகும் செலவின தொகைக்கும் மன்றஅனுமதி கோரப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> – அனுமதிக்கலாம்<br>இ3/ 06268/2010 | 116) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 9 | தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்கா நீரேற்றும் நிலையத்தில் அமைந்துள்ள குளோரினேட்டர் மூலமாக லிக்யூட் குளோரின் குடிதண்ணீரில் கொடுக்கப்பட்டு குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு நகரின் பல பகுதிகளுக்கு பகிர்மானம் செய்யப்பட்டு அளிக்கப்படுகிறது. தேவைப்படும் லிக்யூட் குளோரின் DCW Ltd சாகுபுரம் மூலமாக நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது. இவ்வாண்டு குடிநீர் சுத்திகரிப்பு செய்ய ஆகும் குளோரின் நேரிடையாக வாங்க ஆகும் செலவுத்தொகை ரூ 2.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/06269/2010 | 117) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 10 | தூத்துக்குடி மாநகராட்சியின் குடிநீர் விநியோகம் செய்யப்படும் இராஜாஜி பூங்காவில் அமைந்துள்ள சம்பில் குடிநீரில் குளோரின் தற்போது குளோரின் வாயு செலுத்தி சுத்திகரிப்பு செய்யும் முறையில் சுத்திகரிப்பு செய்யப்பட்டு நகரில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்க்கண்ட குளோரின் சிலிண்டர் மற்றும் குளோரின் பிளாண்ட் மற்றும் அதற்குரிய பம்ப்களை மராமத்து செய்தல், மற்றும் சிலிண்டர்கள் நிரப்பி DCW நிறுவனத்தினரிடம் எடுத்துவருதல் மற்றும் 30 நாட்களுக்கு 4 முறை குளோரின் அளவு சரிபார்த்து சான்றிதழ் பெறுதல் போன்ற பணிகளுக்கு சென்ற வருடம் பராமரிப்பு செய்ய தனி நபர் மூலம் (Privatization) பராமரிப்பு செய்யப்பட்டது. தற்போது தனியார் மூலம் சென்ற வருட பராமரிப்பு பணி மேற்கொண்ட கோடீஸ் இன்டஸ்ரியல் என்ஜினியரிங் தூத்துக்குடி நிறுவனத்தினர் சென்ற வருட பராமரிப்பு ஒப்பந்தப்புள்ளி மன்றம் தனது தீர்மானம் எண் 790 நாள் 24–12–2007 ஒப்புதல்அளிக்கப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் 9–11–09ம் தேதி கடிதத்தில் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி செய்த தர சம்மத கடிதம் கொடுத்துள்ளார். எனவே அதே விலைவிகிதப்படி மேலும் ஒரு வருடம் கோடீஸ் இன்டஸ்ரியல் என்ஜினியரிங் தூத்துக்குடி நிறுவனத்தார் பராமரிப்பு பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதற்காகும் செலவுத்தொகை தோராயமாக ரூ 2.25 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> – மாமன்றம் அனுமதிக்கலாம்** 23660/2007/இ1 | 118) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 11 | இம்மாநகராட்சிக் கட்டுப்பாட்டிலுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் மருந்தக உபயோகத்திற்கு தேவையான மருந்து பட்டியலை மருத்துவ அலுவலர் சமர்ப்பித்துள்ளார். பட்டியலில் கண்ட மருந்துகளின் உத்தேச விலை ரூ 30,011.45 என தெரிவித்துள்ளார். பட்டியலில் கண்ட மருந்துகள் தமிழ் நாடு மருத்துவ சேவைக்கழகத்தின் மூலம் பெற்றுக்கொள்ள தொகை ரூ 30011.45க்கான வங்கி வரைவோலை The Manaing Director Tamil Nadu Medical Services Corporation Ltd. Chennai க்கு வழங்க கோரியுள்ளார்.<br><br>மருத்துவ அலுவலர் சமர்ப்பித்துள்ள மருந்து பட்டியலில் கண்ட மருந்துகள் தமிழ் நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் வாங்கிக் கொள்ளவும் அதற்கான செலவுத் தொகை ரூ 31000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> – அனுமதிக்கலாம்**<br><br>எச்1/10095/2009 | 119) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 12 | தூத்துக்குடி மாநகராட்சி கீழரதவீதி வணிகவளாக கடை எண் 7க்கு 21–1–2009ம் தேதி நடை பெற்ற ஏல ஒப்பந்தப்புள்ளியில் செல்வி ஸ்டெல்லா த/பெ. ஜே.பி. ஹென்றி என்பவர் கோரிய மாத வாடகை ரூ 750/—ஐ இம்மாமன்ற தீர்மான எண் 30 நாள் 29–1–2009ல் ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>அதன்பேரில் ஒப்பந்ததாரருக்கு நிபந்தனையின்படி வைப்புத்தொகையாக 12 மாத வாடகை ரூ 9000/—ஐ செலுத்தக்கோரி 10–02–2009 21–7–2009 மற்றும் 17–2–2009 ஆகிய தேதிகளில் அறிவிப்புகளும் 22–2–10ல் இறுதி அறிவிப்பும் அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர் 12 மாத வாடகை வைப்புத்தொகை செலுத்தவில்லை. எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை.<br><br>எனவே ஏல நிபந்தனை எண் 12 அ –இன் படி ஒப்பந்ததாரர் செலுத்திய வைப்புத்தொகை ரூ 5000/—ஐ பறிமுதல் செய்து பொது நிதியில் வரவு எடுத்துக்கொள்ளவும் மேற்படி கடைக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u> – மாமன்றம் அனுமதிக்கலாம்**<br><br>ந.க.எண்.அ16/816/2009 | 120) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 13 | இம்மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடைத்திட்ட பணிகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்கம் செய்ய இயக்குதல் மற்றும் கையாளுதல் திட்ட நிதியின் கீழ் வாங்க அனுமதிக்கப்பட்ட ஜெட் ராடு மெஷின் ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய 07–04–2010ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் யாரும் கலந்து கொள்ளாததால் இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு மெஸ்ஸர்ஸ் எந்திரால் கமியூனிகேஷன் பி.லிட், சென்னை நிறுவனத்தினர் ரூ 13039/— (ரூபாய் பதிமூன்றாயிரத்து முப்பத்தொன்பது மட்டும்) க்கு பட்டியல் வழங்கி உள்ளார்கள். தொகையை வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> – அனுமதிக்கலாம்**<br><br>இ1/14394/2009 | 121) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 14 | 2009.2010ம் ஆண்டில் தூத்துக்குடி மாநகராட்சியின் உபயோகத்திற்கு பதிவேடுகள் படிவங்கள் எழுது பொருட்கள் கணிணி பொருட்கள் வாங்கவும் அச்சிட்டு பெறவும் அதற்கான செலவினம் ரூ 11.00 லட்சத்திற்கு வாங்க மாமன்றம் தனது தீர்மான எண். 94 நாள் 29–5–2009ம் தேதியில் அனுமதி வழங்கியுள்ளது. தற்போது மேற்படி பொருட்கள் வாங்க செலவுத்தொகை அதிகமாகிவிட்டபடியாலும் அலுவலக கணிணி பயன்பாட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் மன்ற தீர்மான எண் 27 நாள் 4–1–2010ம் தேதியில் செலவினம் ரூ 3.00 இலட்சம் அனுமதித்துள்ளது. மேலும் மார்ச் மாதம் கணிணி பிரிவில் வசூல் அதிகமாக உள்ளபடியால் சொத்துவரி தண்ணீர் கட்டணம் வசூல் செய்யும் ரசீதுகள் அதிகளவில் தேவைப்படுகிறது. மேற்படி ரசீதுகளை அவசரமாக வாங்க வேண்டியது இருப்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு ஏற்படும் செலவினம் ரூ 1.00 இலட்சம் அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – 1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>2) அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாநகராட்சிக்கு தேவையான எழுதுபொருட்கள் கூட்டுறவு நிறுவனங்களில் வாங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>சி4/2653/2009 | 122) அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| | 15 | அரசாணை எண் 340 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 08–08–2008 இல் 15–09–2009ற்கு பின் ஓய்வு பெற்ற பணியாளருக்கு சிறப்பு சேம நல நிதி அரசு பங்கிட்டு மான்யத் தொகை ரூ 5000/– இருந்து ரூ.10000/–மாக உயர்த்தி வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் பேரில் இம்மாநகராட்சியில் 15–09–2000ற்கு பின்பு ஓய்வு பெற்ற பொறியாளர் பிரிவு பணியாளருக்கு மேற்படி அரசாணைபடி சிறப்பு சேமநல நிதி கூடுதல் அரசு பங்கீட்டு மான்யத் தொகை ரூ 5000/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> – மாமன்றம் அனுமதிக்கலாம்** இ2/26708/2009 | 123) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 16 | சுற்றுலா வளர்ச்சி திட்டத்தின் கீழ் தூத்துக்குடி ரோச் பூங்காவில் படகுத்துறை அமைக்கும் பணிமேற்கொள்வதற்கு இம்மாநகராட்சிக்கு அனுமதி வழங்குவதற்கும் மேற்படி பணிக்கான சுற்றுசூழல் பாதுகாப்பு தொடர்பான தடையின்மை சான்று வழங்குவதற்கும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில கடற்கரை மேலாண்மை குழுமம் சென்னை அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட கடற்கரை மேலாண்மை குழுமம் தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் பரிசீலினைக் கட்டணம் ரூ 50000/– தொகையை ''சுற்றுப்புற சூழல் துறை இயக்குநர், சென்னை'' அவர்கள் பெயருக்கு கேட்பு வரைவோலை மூலம் அனுப்ப வேண்டும் என்றும் மேற்படி வரைவோலையுடன் மேற்படி பணி சம்பந்தப்பட்ட ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்படி பரிசீலனைக் கட்டணத்தொகை ரூ 50000/–ஐ இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> – மாமன்றம் அனுமதிக்கலாம்**<br><br>இ5/14753/07 | 124) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 17 | இம்மாநகராட்சி பாளையங்கோட்டை ரோடு மேற்கு டி.எம்.பி. காலனியில் சின்னசாமி நாடார் குமாரத்தி சித்திரைப்பூ என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தை மாநகராட்சியின் மூலம் அகற்றப்பட்டதை எதிர்த்து வாதி திருமதி சித்திரைப்பூ என்பவர் மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக குறிப்பிட்டு தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் I/A/NO/ 294/10 in O.S. No.77/10 வழக்கு தொடர்ந்துள்ளார்.<br><br>எனவே மேற்கண்ட வழக்கில் மாநகராட்சி சார்பாக மாமன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> – மாமன்றம் அனுமதிக்கலாம்<br>எப்1/6662/10 | 125) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 18 | 2010–2011ம் ஆண்டில் இம்மாநகராட்சியின் உபயோகத்திற்கு பதிவேடுகள் படிவங்கள் மற்றும் எழுது பொருட்கள் வாங்கவும் மற்றும் அச்சிட்டு பெறவும் அதற்காக உத்தேசமாக ரூ 16.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை மாநகராட்சி 2010–2011ம் ஆண்டிற்குரிய வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 1600000/–ஐ அனுமதிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலகக் குறிப்பு** – 1) அனுமதிக்கலாம்<br><br>2) அவசரம் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சிக்கு தேவையான பதிவேடுகள் படிவங்கள் மற்றும் எழுதுபொருட்கள் கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கவும் அச்சிட்டு பெறுவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>சி4/3622/10 | 126) அலுவலகக் குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது |
| | 19 | அ) தூத்துக்குடி மாநகராட்சி நகராட்சியாக செயல்பட்ட காலத்தில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெறும் வயதை கடந்து தற்காலிக பணி நீக்க காலத்திலிருக்கும் திரு. சி. ராஜாமணி என்பவர் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் மாநகராட்சி ஆணையர் தூத்துக்குடி அவர்கள் மீது சென்னை உயர்நீதி மன்றம் மதுரை பெஞ்சில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P (MD) No 11409/2009க்கு திரு.சி. ராஜாமணி என்பவர் மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு 56 நாட்களுக்குள் இறுதி உத்திரவு பிறப்பிக்குமாறு 25–11–2009ம் தீர்ப்பில் நீதிமன்றத்தால் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>வருவாய் உதவியாளர் திரு. சி. ராஜாமணி என்பவர் ஓய்வுபெறும் வயதை கடந்து நாளது தேதி வரை தற்காலிக பணிநீக்க காலத்தில் இருந்து வருவதால் இறுதி உத்திரவு பிறப்பிப்பது தொடர்பான நடவடிக்கை அரசால் மேற்க்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் மேற்படி நீதிமன்ற தீர்ப்பின் மீது 6 மாத கால நீட்டிப்பு வழங்க கேட்டு இம்மாநகராட்சி சார்பில் மேற்படி வழக்கினை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் (மதுரை) திரு எஸ். கடற்கரை அவர்கள் வாதாடவும் மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அன்னாருக்கு வழுங்கவும் மற்றும்<br><br>ஆ) திரு.சி. ராஜாமணி (வ.உ.) என்பவர் மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது விசாரணை மேற்கொண்டு அதன் மீது இறுதி உத்திரவு பிறப்பிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய ஏதுவாக அதன் மீது விசாரணை மேற்கொள்ளும்பொருட்டு 19–03–2010ல் நடைபெற உள்ள விசாரனைக்கு ஆஜராக கோரி திரு சி. ராஜாமணி என்பவருக்கு இவ்வலுவலக அறிவிப்பு எண் சி1/1733/2002 நாள் 05–03–2010ல் அறிவிப்பு அனுப்பப்பட்டதில் அன்னாரை விசாரணை செய்யக்கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் மதுரை பெஞ்சில் அன்னாரால் தொடரப்பட்ட வழக்கு எண். 3350/2010ன் படி மேற்படி விசாரணைக்கு கடந்த 17–03–2010ல் தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட தடை உத்திரவை நீக்கி அன்னார் மீது விசாரணை மேற்கொண்டால்தான் திரு சி. ராஜமணி என்பவர் மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு இறுதி உத்திரவு அரசால் பிறப்பிக்க முடியும். | 127) அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ அனுமதி அளிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | எனவே மேற்படி தடை உத்திரவை ரத்து செய்ய ஏதுவாக அவ்வழக்கின் மீது மேல்முறையீடு செய்து மேற்படி வழக்கினை மாநகராட்சி சார்பில் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு எஸ். கடற்கரை அவர்கள் வாதாடவும் மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அன்னாருக்கு வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அ) சென்னை உயர்நீதிமன்றம் மதுரை பெஞ்ச் வழக்கு எண்.<br>WP (MD) No 11409/2009 மற்றும்<br><br>ஆ) சென்னை உயர்நீதிமன்றம் மதுரை பெஞ்ச் வழக்கு எண்<br>WP (MD) No 3350/2010 ஆகிய வழக்கு தொடர்புடைய செலவுகளை பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>சி1. 1733/2002 | |
| | 20 | தூத்துக்குடி மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் தனது ந.க.எண். 4351/அ2/2007 நாள் 26–02–2010ம் தேதிய கடிதத்தில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் மாவட்ட தொடக்க கல்வி அலுவலகத்தை சென்னை தொடக்க கல்வி இயக்குநர் அவர்களின் ஆணையின்படி தூத்துக்குடி ஜின்பாக்டரி ரோடு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் போதிய இடவசதி கட்டிட வசதி உள்ளதால் இவ்வலுவலகக் கட்டிடத்தை மேற்காண் பள்ளிக்கு மாற்றிட கேட்டுக்கொண்டுள்ளார்.<br><br>மாவட்ட தொடக்க கல்வி அலுவலரின் வேண்டுகோளின்படி தூத்துக்குடி ஜின்பாக்டரி ரோடு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் போதிய இடவசதி கட்டிட வசதி உள்ளதால் மாவட்ட தொடக்க கல்வி அலுவலகத்தினை மாற்றம் செய்ய மாமன்ற உத்திரவு வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட கட்டிடத்திற்கான வாடகையை பொதுப்பணித்துறை வழிகாட்டுதலின் பேரில் வாடகை வசூலிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். இ1/3593/2010 | 128) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 21 | இம்மாநகராட்சியில் நடைபெற்றுவரும் பொன்விழா ஆண்டு நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் நிர்வாகம் மற்றும் செயல்பாடு நிதியில் (A & O Charges) 2009-2010ம் ஆண்டுக்கு ரூ 175040/– (ரூபாய் ஒரு லட்சத்தி எழுபத்தைந்தாயிரத்தி நாற்பது மட்டும்) அனுமதிக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட தொகையிலிருந்து கீழ்க்கண்ட விபரப்படி அலுவலக நிர்வாகத்திற்கு தேவையான பொருட்கள் வாங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1.கணிணி மேஜை – ஒன்று<br>2.சுழல் நாற்காலி – ஒன்று<br>3. ‘‘எஸ்’’ டைப் நாற்காலி – ஒன்று<br>4. ஜெராக்ஸ் மிஷின் – ஒன்று<br>5. கணிணி பிரிண்டருக்கான டோனர் – 5 எண்ணிக்கை<br><br>மேற்கண்ட வரிசை எண் 1 முதல் 3 வரையிலான பர்னிச்சர்களை டான்சி நிறுவனத்திடமிருந்து வாங்கவும் வரிசை எண் 4ல் கண்டுள்ள ஜெராக்ஸ் மிஷினை DGST விலைப்புள்ளி அடிப்படையில் வாங்கவும் வரிசை எண் 5ல் உள்ள டோனரை கூட்டுறவு பண்டசாலையில் வாங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறத.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br>8229/2010/எப்6 | 129) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

# <u>அவசரக் கூட்டப்பொருள்</u>

2010ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3 (2) ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 26.05.10 | 1 | இம்மாநகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் சுகாதார பிரிவுகளில் தற்போது இயக்கத்தில் உள்ள வாகனங்கள் மற்றும் இயக்கத்தில் இல்லாத வாகனங்களுக்கு 01.04.2010 முதல் 15.04.2010 வரை வாகனவரி, பசுமை வரி, பாதுகாப்பு வரி, சர்வீஸ் சார்ஜ் கட்டணம், காப்பீட்டு சான்று புதுப்பித்தல் கட்டணம், புகைச் சான்று கட்டணம், மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் பதிவு சான்று கட்டணம் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு செலுத்தவும் அது வகைக்கு ஆகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>இ6/8354/10 | 130) அலுவலகக் குறிப்புப் படி அனுமதி வழங்கப்பட்டது. |
| | 2 | இம்மாநகராட்சி எல்லை புல்தோட்டம் பகுதியில் பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் பகுதியில் வடிகால் அமைக்கும் பணிக்கு பாதாளச் சாக்கடை திட்டம் நிதியிலிருந்து செய்ய மன்றம் தனது தீர்மான எண் 103 நாள் 19.4.2010ல் அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் 14.05.2010ம் தேதிய இ–டெண்டர் மூலம் இரண்டாவது அழைப்பு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்றம் தனது தீர்மான எண் 103 தேதி 19.04.2010ல் ரூ.4000000/– அனுமதி வழங்கியுள்ளது.<br><br>1) திரு எஸ்.ரம்போலா ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு ரூ.**4.83**ரூ டேவணித் தொகை அதிகம் ரூ.**3969452**/– செலுத்தியுள்ளார்<br><br>2) திரு எஸ்.சுதர்சன், ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு ரூ.**5.46**ரூ டேவணித் தொகை அதிகம் ரூ.**3993895**/– செலுத்தியுள்ளார்<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி 2009–10 ஆண்டில் மதிப்பீடு அடிப்படையில் பெறப்பட்டது. தற்போது உள்ள விலை விகிகிப்பட்டியல் சுமார் 5 முதல் 6% சதவீதம் வரை உயர்ந்துள்ளது. எனவே 2010–11ம் ஆண்டு விலை விகிதப்பட்டியலில் ஒப்பிட்டு பார்க்கும் போது ஏறக்குறைய மதிப்பீட்டின் விலைக்கே ஒப்பந்தப்புள்ளியை பெறப்பட்டுள்ளது என உத்தியேசிக்கப்படுகிறது. மேலும் தற்போது மேற்கண்ட பணியை உடனடியாக செய்ய வேண்டியிருப்பதாலும் மேலும் இப்பணி தற்போது | 131) அலுவலகக் குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மழைக் காலத்திற்கு முன் முடிக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. எனவே STP பணி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேலும் பொறியியல் கையேடு பக்கம் 9 பாரா எண் 2.7.2 மதிப்பீடு ரேட்டை விட **5%** வசூலிக்கலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ்.ரம்போலா மதிப்பீட்டை விட **4.83%** அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஒப்புக் கொள்ளலாம்.<br><br>ம.ப.எண்.**202/09–10** | |
| | 3 | தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண் 38, பாளையங்கோட்டை ரோடு, சர்வே வார்டு 2, பிளாக் 15, நகரளவு எண் 1402, வட்டத் தெப்பம் அமைந்துள்ள இடத்தில் வணிக வளாகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தின் மேற்புறம் டெலிபோன் பூத் ஒன்றும், ஆவின் பாலகம் ஒன்றும் முறையே திரு வாசுதேவன் என்பவருக்கும், திரு உதயசூரியன் என்பவருக்கும் பூத் வைத்துக் கொள்ள உரிமம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி இடத்தில் வணிக வளாகம் கட்டப்பட உள்ளதால் மேற்படி இரு பூத்துகளையும் காலி செய்ய வேண்டியுள்ளதால், அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தை 01.06.2010 முதல் ரத்து செய்து காலி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>மேற்படி இடம் நகரின் மைய வணிகப் பதியாக அமைந்துள்ளதால் அவ்விடத்தில் வணிக வளாகம் கட்டி வாடகைக்கு விட்டால் கூடுதல் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே மேற்படி இடத்தில் வணிக வளாகம் கட்ட ஏதுவாக தற்போதுள்ள இரு பூத்துகளுக்கும் வழஙகப்பட்டுள்ள உரிமத்தை **01.06.2010** முதல் ரத்து செய்து, பல்வகை கேட்புப் பதிவேட்டிலிருந்து மேற்படி இரு இனஙகளையும் நீக்கம் செய்யலாம்.<br>எப்**1/8419/10** | 132) அலுவலகக் குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது |
| | 4 | தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட மேலூர் ரயில்வே நிலையத்தை புதிய பேருந்து நிலையம் எதிரில் உழவர் சந்தைக்கு தெற்கில் மேற்படி மேலூர் ரயில்வே நிலையம் அமைப்பது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் ந.க.எண்.இ3/44689/2008 நாள் 14.12.2008ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் பேரில் நகரளவு எண்கள் 4127, 4128, 4153 ஆகியவற்றில் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட 3241.5 சதுர மீட்டர் இடத்தினை ரயில்வே நிர்வாகத்திற்கு இடமாற்றம் செய்ய கோரப்பட்ட இடத்தினை பொது நலன் கருதி ரயில்வே நிர்வாகத்திற்கு வழங்க மாமன்ற தீர்மான எண் 19 நாள் 04.01.2010ம் தேதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட 3241.5 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தின் சார் பதிவாளர் வழிகாட்டுதல் மதிப்பின்படி கிரையத் தொகை ரூ.1,48,29,863/– அல்லது கிரையத் தொகைக்கு ஈடாக ரயில்வே நிர்வாகத்தின் இடத்தினை வழங்க சம்மதம் தெரிவிக்குமாறு ரயில்வே நிர்வாகத்திடம் இவ்வலுவலக 01.04.2010ம் தேதியிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டதில் முதுநிலை கோட்டப் பொறியாளர் (தெற்கு) தென்னக ரயில்வே, மதுரை அவர்களின் கடித எண் U/w 271 land acquisition/TN நாள் 11.05.2010 தேதியிட்ட கடிதத்தில் மாநகராட்சி இடத்தின் கிரையத் தொகைக்கு ஈடாக ஆண்டாள் தெரு மேலூர் ரயில்வே நிலைய பிளாட்பாரம் அமைந்துள்ள | 133) அலுவலகக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மேலூர் ரயில்வே நிலைய பிளாட்பாரம் அமைந்துள்ள 3923.5 சதுரமீட்டர் பரப்பளவு உள்ள ரயில்வே இடத்தினை மாநகராட்சிக்குப் பெற்றுக் கொண்டு புதிய பேருந்து நிலைய தெற்கு பகுதியில் அமைந்துள்ள 3241.5 சதுரமீட்டர் பரப்பளவு |

| | | | |
|---|---|---|---|
| | | ரயில்வே இடத்தினை மாநகராட்சிக்கு வழங்க சம்மதம் தெரிவித்துள்ளது. சார் பதிவாளர் வழிகாட்டி மதிப்பீட்டின்படி ஆண்டாள் தெரு பகுதியிலுள்ள நிலத்திற்கு 1 சதுர மீட்டருக்கு ரூ.3780/– ஆக உள்ளது. மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட 3241.5 சதுர மீட்டர் இடத்தின் கிரையத் தொகைக்கு இணையாக ஆண்டாள் தெருவில் 3923.5 ச.மீட்டர் பரப்பளவுள்ள இடம் இரயில்வே நிர்வாகம் மாநகராட்சிக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே ரயில்வே நிர்வாகம் கோரியுள்ள 3241.5ச.மீட்டர் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடத்தினை ரயில்வே நிர்வாகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாகவும் ரயில்வே நிர்வாகம் மாநகராட்சிக்கு வழங்கப்படவுள்ள மேலூர் ரயில்வே நிலையம் அமைந்துள்ள பிளாட்பாரம் அமைந்துள்ள 3923.5 ச.மீட்டர் பரப்பளவுள்ள இடத்தினை பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் அரசின் பரிசீலனைக்கும் தக்க உத்திரவுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக கருத்துரு அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br><br>இரயில்வே நிர்வாகம் தற்போது மேலூர் ரயில்வே நிலையம் 2வது கேட் மற்றும் 3வது கேட் இடைப்பட்ட பகுதியிலுள்ள காரணத்தினால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே ரயில்வே நிர்வாகம் தற்போது மேற்கண்ட ரயில்வே நிலையத்தை புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரில் மாற்றம் செய்ய உத்தேசித்துள்ளது. தற்போது உத்தேசிக்கப்பட்ட இடத்தில் மேலூர் ரயில்வே நிலையம் மாறினால் போக்குவரத்து மிகவும் குறையும். எனவே ஆண்டாள் தெருவிலுள்ள மேலூர் ரயில்வே நிலைய பிளாட்பாரம் அமைந்துள்ள 3923.5 சதுர மீட்டர் பரப்பளவுள்ள ரயில்வே இடத்தினை மாநகராட்சிக்கு பெற்றுக் கொண்டு, புதிய பேருந்து நிலைய தெற்கு பகுதியுள்ள மாநகராட்சி சாலை இடமான 3241.5 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தினை ரயில்வே நிர்வாகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய அரசின் சிறப்பு அனுமதி பெற்று ரயில்வே நிர்வாகத்திற்கு வழங்கலாம்.<br><br>எப்1/809/2009 | உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தினை அரசின் அனுமதி பெற்று ரயில்வே நிர்வாகத்திற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. |
| | 5 | தூத்துக்குடி மாநகராட்சி SJSRY Wage Employment திட்டத்தின் கீழ் 2010–11ஆம் ஆண்டிற்கு ரூ.519773/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண் 14888/2010/UPA3 நாள் 21.05.2010 தேதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்கண்ட திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணி எடுத்து செய்வதற்கு மான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>தெற்கு சம்பந்த மூர்த்தி தெருவில் வடிகால் <u>மதிப்பீட்டு தொகை</u><br>அமைத்து தார்தளம் அமைக்கும் பணி<br>ரூ.6.50 லட்சம்<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் கூடுதல் செலவினம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br>**இ1/17135/2009** | 134) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>6</td><td>தூத்துக்குடி மாமன்றம் தனது தீர்மான எண் 61 நாள் 26.02.2010ல் பாளைரோடு வட்டத்தெப்பம் குளியலறை அமைந்துள்ள இடத்தில் மாநகராட்சி வருவாயை பெருக்கும் நோக்கத்தில் வணிக வளாக கட்டிடம் கட்ட தீர்மானித்துள்ளதால் மேற்படி குளியலறை ஏல இனத்தில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் வணிக வளாகம் கட்டும் பட்சத்தில் கடந்த காலங்களில் மேற்படி குளியலறை மூலமாக வரப்பெற்ற வருவாயைவிட கூடுதல் வருவாய் கிடைக்கும் என மன்றம் கருதியதின் அடிப்படையில் புதிதாக வணிக வளாக கட்டிடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டது. மேற்கண்ட இடத்தை மாநகராட்சி பொறியர், நகரமைப்பு அலுவலர்(பொ), நகரமைப்பு ஆய்வர், மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரால் நேராய்வு செய்யப்பட்டு தற்போது மேற்படி குளியலறை அமைந்துள்ள இடமான வார்டு 2, பிளாக் எண் 15, நகரளவு எண் 1402ல் அமைந்துள்ள 23மீ நீளம் 5மீ அகலம் கொண்ட இடத்தில் வணிக வளாகம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தற்போது கடைகள் கட்டுவதற்கு கட்டிடத்தின் முன்பக்கம் உள்ள டிரான்ஸ்பார்மரை இடம் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி கட்டிடத்தின் முன் பகுதியில் அமைந்துள்ள தொலைபேசி பெட்டிக்கடை மற்றும் ஆவின் பாலக கடையின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டியுள்ளது.<br>எனவே மேற்கண்ட திட்டத்தின்படி டிரான்ஸ்பார்மரை இட மாற்றம் செய்வதற்கும், மேற்படி கடையின் உரிமத்தினை ரத்து செய்து வணிக வளாகம் கட்டுவதற்கு மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u> அனுமதிக்கலாம்<br><br>எப்1/8419/10</td><td>135) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>7</td><td>தூத்துக்குடி மாநகராட்சி O & M Gap filling திட்டத்தின் கீழ் மின் விளக்கு பராமரிக்க தேவையான கைடிராக் ஏணி 1 எண்ணம் வாங்குவதற்கு மாமன்றம் தனது தீர்மான எண் 44 நாள் 26.02.10ம் தேதியில் ரூ.12.00 லட்சம் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டன.<br><br>1) T.V.சுந்தரம் அய்யனார் அன் சன்ஸ், மதுரை<br>2) சாமி மெக்கானிக்கல் இன்ஜினியரிங், மதுரை<br><br>பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப விபரங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் சாமி மெக்கானிக்கல் இன்ஜினியரிங் மதுரை அவர்களால் கொடுக்கப்பட்ட தொழில்நுட்ப விபரங்கள் பூர்த்தி அடையவில்லை. மேலும் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி சரிபார்க்கும் (Technical elevation) கூட்டத்தில் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்துவிட்டு T.V.S. மதுரை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என 18.05.10ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் T.V.S மதுரை அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள விலைப்புள்ளி படிவத்தை 19.05.2010ம் தேதி திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்க்கண்ட விவரப்படி தயாரிக்கப்பட்டது.<br><br><table><tr><td>1</td><td>வண்டிக்கு உரிய 6.5 திறன் உள்ள 110KVA and 4200m Whell baseக்கு</td><td>ரூ. 655000/–</td></tr></table></td><td>136) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2.</td><td>11M உயரம் உள்ள மின்விளக்கு கைடிராலிக் லேடர் வாங்குவது</td><td>ரூ. 600000/–</td></tr>
<tr><td>3.</td><td>மேற்கண்ட வண்டிக்கு ஆயுள்காப்பீடு, நிரந்தர பதிவு கட்டணம் உள்ளவை</td><td>ரூ. 44000/–</td></tr>
</table>
மேற்கண்ட கம்பெனிக்கு விலை குறைப்பு கடிதம் இவ்வலுவலகம் வாயிலாக கேட்கப்பட்டதில் வ.எண்.2க்குரிய இனத்திற்கு மட்டும் ரூ.6,00,000/– பதிலாக ரூ.5,78,000/– செய்து தர சம்மதம் தெரிவித்து 21.05.2010ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு: மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட T.V.S. மதுரை அவர்களின் ஒப்பந்தப்புள்ளி அவசர அவசியத்தை முன்னிட்டும், 31.07.10ம் தேதி முடிக்க வேண்டியதிருப்பதால் அனுமதிக்கப்பட்டது. மேலும் கூடுதல் செலவினம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br>
இ1/14394/2009
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>8</td>
<td>
மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அலுவலக அனுமதியற்ற வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகளை முறைப்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறை அரசாணை (நிலை) எண் 65, நாள் 12.04.2010இல் திருத்திய அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மேற்படி அரசு ஆணையில்<br>
1) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தற்போதுள்ள அனுமதியற்ற வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகளை, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளால் தற்போது வசூலிக்கப்படும் வைப்புத் தொகையைப் போன்று இரு மடங்கு வசூலித்தபின் முறைப்படுத்த வேண்டும்.<br>
2) இந்த நடைமுறையை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் மட்டுமின்றி, (சென்னை மாநகராட்சி நீங்கலாக) அனைத்து மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.<br>
மேலும் இவ்வாணை வெளியிடப்படும் நாளியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் செயல்படுத்தி அனுமதியற்ற வீட்டு குழாய் இணைப்புகளை முறைப்படுத்திட தெரிவிக்கப்பட்டு வரப்பெற்ற அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u> மாமன்றம் பதிவு செய்யலாம்<br>
இ3/6279/2010
</td>
<td>137) அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 9 | நகரங்கள் மற்றும் மாநகரங்களில் வாழும் ஏழை மக்களின் நிலையை உயர்த்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்புற வறுமை ஒழிப்பு அமைச்சர் அவர்கள் குடிசைகள் அற்ற நகரங்களையும், மாநகரங்களையும் மேம்படுத்துமாறு அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கு தெரிவித்துள்ளார். அதற்காக ஒவ்வொரு நகரம் மற்றும் மாநகரத்தில் வாழும் ஏழைகளுக்கு அடிப்படை வசதிகளை வழங்க காலவரையறைக்கு உட்பட்ட செயல்திட்டத்தை வடிவமைத்து செயல்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார். எனவே உள்ளாட்சி அளவிலான செயல்முறை திட்டங்களை தயாரிக்க புள்ளி விவரங்கள் தேவைப்படுகிறது என்பதால் மாநகரங்கள்/நகரங்களின் குடிசை பகுதி விவரங்கள், வறுமை மற்றும் வாழ்வாதார நிலைகளை கணக்கெடுப்பதற்கான படிவங்கள் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிகளை மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் மேற்கொள்ளவும், உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய கட்டுமான அமைப்பு, வீட்டு வசதி மற்றும் நகர்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம், நகர்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் தேர்ந்துதெடுக்கப்பட்ட மாநகரங்கள், நகராட்சிகள் மற்றும் மாவட்ட நிர்வாகங்களுக்கு குடிசை மேம்பாடு, நகர்புற வறுமை மற்றும் சமூக பொருளாதார ஆய்வுகள் உள்ளிட்ட வாழ்க்கைத்தரம் பற்றிய முதற்சுற்று கணக்கெடுப்பிற்காக ஒரு முறை மான்ய உதவி வழங்கும் என்றும் இந்த மான்ய உதவி கீழ்க்கண்ட அளவில் வழங்கப்படும் அதாவது 1 லட்சம் முதல் 5 லட்சம் வரை மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு நகருக்கும் ரூ 3 லட்சம் ஆகும்.<br><br>1) குடிசைப் பகுதி குறித்த விவரங்கள் தயாரித்தல்<br>2) நகர்புற வறுமை குறித்த விவரங்கள் தயாரித்தல்<br>3) வாழ்வாதாரம் குறித்த விவரங்கள் தயாரித்தல் (சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு உள்பட) ஆகியவை அனுமதிக்கப்பட்ட உட்கூறுகளாகவும்<br><br>1) நகர்புற பகுதியில் உள்ள ஒவ்வொரு குடிசைப் பகுதியின் விபரங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.<br>2) நகரம்/மாநகரம் முழுவதும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்படாத குடிசைப் பகுதியிலும் தகவல் சேகரிக்கப்பட வேண்டும். என்பது ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய பகுதிகளாகவும் ஆய்வின் போது கீழ்க்காணும் விசாரணை அட்டவணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>பகுதி– அ – குடிசைப் பகுதி குறித்த பொதுவான தகவல்<br><br>பகுதி– ஆ – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் குடிசைப் பகுதி விவரங்கள்<br><br>பகுதி– இ – கணக்கெடுப்பு செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் | 138) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | பிற்சேர்க்கை– 1 – குடிசைப் பகுதியின் விரிவான கணக்கெடுப்பு<br><br>பிற்சேர்க்கை – 2 – குடியிருப்போரின் விரிவான கணகெடுப்பு<br><br>பிற்சேர்க்கை– 3 – வாழ்வாதாரம் பற்றிய விரிவான கணக்கெடுப்பு<br><br>பிற்சேர்க்கை–4–ராஜிவ் அவாஸ் யோஜனா விவரங்களை சேகரிக்கும் கணக்கெடுப்பு<br><br>பிற்சேர்க்கை–5 – நகர்ப்புற சுகாதாரக் கணக்கெடுப்பு<br><br>பிற்சேர்க்கை– 6– சாலையோர வியாபாரிகள் குறித்த ஆய்வு<br><br>பொன்விழா ஆண்டு நகர்புற வேலை வாய்ப்பு தட்டம் 2009–2010ம் ஆண்டிற்கு UCDNW- (Urban Community Develop Net work) தலைப்பின் கீழ் தொகை ரூ. 2,59,887/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இந்த தொகையினை Slum Survey நகர்ப்புற குடிசை பகுதி / சமூக பொருளாதார கணக்கெடுப்பு அட்டவணை தயார் செய்தல் பணிக்கு பயன்படுத்திக்கொள்ளவும் IEC – (Information Education Communication) திட்டத்தின் கீழ் விளம்பரங்கள், ஆய்வுகள் மற்றும் குடிசை பகுதி கணக்கெடுப்பிற்கு பயன்படுத்திக்கொள்ள 2009–2010ம் ஆண்டிற்கு 1,18,790/– மத்திய மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவே இந்த இரண்டு ஒதுக்கீட்டு தொகைகளை சேர்த்து மொத்தம் ரூ 3,78,677/–ஐ நகர்ப்புற குடிசை பகுதி/சமூக பொருளாதார கணக்கெடுப்பு அட்டவணை தயார் செய்தல் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்து உரிய செலவினங்கள் மேற்கொள்ளவும், மாநகர மற்றும் நகர்ப்புற குடிசை பகுதி/ சமூக பொருளாதார கணகெடுப்பு அட்டவணையில் கண்டபடி படிவங்கள் கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்து பெறவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br><br>எச்1/6667/10 | |
| | 10 | இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பாத்திமா நகர் நகர் நல மையத்தில் ஆயாவாக பணிபுரியும் திருமதி. மு. பொன்னம்மாள் என்பவர் தனது வயது முதிர்வின் காரணமாக 30–4–2010 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் அன்னாருடைய சேமநல நிதி கணக்கினை முடித்து கீழ்க்கண்ட விவரப்படி தொகைகள் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை ரூ. **2960**<br>வட்டித் தொகை ரூ. **14729**<br>அரசு மான்யத் தொகை ரூ. **10000**<br>————————————<br>மொத்தம் ரூ. **27689**<br>————————————<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம் எச்1. 10771/10 | 139) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 11 | இம்மாநகராட்சி பணியாளர் திரு எஸ். சீனிவாசன் என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமணக்கடன் முன்பணம் தொகை ரூ 10,000/– வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை. அன்னார் இம்மாநகராட்சி பணியாளராக பணிபுரிந்து வருகின்றார். இவருக்கு திருமணக்கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ 10,000/–ஐ மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு–**மாமன்றம் திருமணக்கடன் வழங்க அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.பி4/7841/10 | 140) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 12 | தூத்துக்குடி மாநகராட்சி O & M Gap filling திட்டத்தின் பாதாளச் சாக்கடை சுத்தம் செய்யும் கருவி (Sewer jetting rod machine with 11 ton G.W. Vehicle Chasses with the Capacity of 6000 litre) 1 எண்ணம் வாங்குவதற்கு மாமன்றம் தனது தீர்மான எண் 44 நாள் 26–02–10 தேதியில் ரூ. 18 இலட்சம் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.<br><br>மெசர்ஸ் காம் அவிடா என்விரோ இன்ஜினியரிங் (பி) லிட்<br>255/1 கின்ஜாவாடி முசி<br>புனே 411 057<br><br>மெசர்ஸ் லிப்ட் மேக் உட்யோக் (பி) லிட்<br>3/24/1 கஸ்ரா கிராமம்<br>அனுமன் மந்திர்<br>குர்கான் 121 001<br><br>பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப விபரங்கள் ஆய்வு செய்ததில் மெசர்ஸ் லிப்ட் மேக் உபயோக் (பி) லிட் குர்கான் அவர்கள் கொடுக்கப்பட்ட தொழில்நுட்ப விவரங்கள் பூர்த்தி அடையவில்லை. மேலும் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி சரிபார்க்கும் (Technical Evaluation) கூட்டத்தில் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்து விட்டு மெசர்ஸ் காம் அவிடா என்விரோ இன்ஜினியரிங் (பி) லிட் புனே அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம் என தீர்மானித்து 18–05–2010ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மெசர்ஸ் காம் அவிடா அவர்கள் கொடுக்கப்பட்டுள்ள விலைப்புள்ளி படிவத்தை 19–05–2010ம் தேதி திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. அதில் இப்பணிக்கு மொத்தம் ரூபாய் 23,62,500/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தார். எனவே மேற்கண்ட பணிக்கு விலை குறைப்பு கடிதம் இவ்வலுவலகம் வாயிலாக கேட்கப்பட்டதில் இப்பணிக்கு ரூ 2,29,400/–க்கு செய்ய சம்மதித்து 24–05–2010 அன்று மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. எனவே மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அனுமதிக்க | 141) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட மெசர்ஸ் காம் அவிடா அவர்களின் ஒப்பந்தப்புள்ளி அவசர அவசியத்தை முன்னிட்டு 31–07–10ம் தேதியில் முடிக்க வேண்டியதிருப்பதால் மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மாமன்றம் அனுமதித்த தொகைக்கு மேல் செலவாகும் தொகையை பாதாளச் சாக்கடைத்திட்ட நிதியிலிருந்து ஈடு செய்யலாம்.<br><br>இ1/14394/2009 | |